RNI-N0: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




மாலை தந்தி
MALAI THANTHI
தமிழால் வெல்வோம்
www.malaithanthi.in
DAILY EVENING
மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 64 | மார்ச்.13 2026 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# எரிபொருள் தட்டுப்பாடு அச்சம் வேண்டாம்: பொது மக்களுக்கு முதல்வர் ஸ்டாலின் வேண்டுகோள்



சென்னை: மார்ச்.13-

"போதுமான எரிபொருள் கையிருப்பில் உள்ளதாக ஒன்றிய அரசின் சார்பில் தெரிவிக்கப்பட்டு வரும் நிலையில், பொதுமக்கள் யாரும் அச்சப்படவோ, பதற்றம் கொள்ளவோ வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறேன்" என தமிழக முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "மேற்காசியப் போர்ச்சூழல் காரணமாக, தற்போது ஏற்பட்டிருக்கும் நெருக்கடிகளை எதிர்கொள்ள, இரண்டு நாட்களுக்கு முன்பு உயர்மட்ட ஆலோசனை மேற்கொண்டதோடு, சமையல் எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாடு பெட்ரோல் டீசல் உள்ளிட்ட எரிபொருள் விநியோகம் குறித்து பிரதமருக்கும், தொடர்புடைய ஒன்றிய அமைச்சர்களுக்கும் கடிதம் எழுதியுள்ளேன்.

உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் சக்கரபாணி தலைமையில், எரிவாயு தட்டுப்பாட்டை எதிர்கொள்வது குறித்த ஆலோசனைக் கூட்டமும் நேற்று நடைபெற்றுள்ளது. இவ்விவகாரத்தில் ஒன்றிய அரசு மேலும் தீவிரமாகக் கவனம் செலுத்திட நாடாளுமன்ற வளாகத்திலும் எதிர்க்கட்சியினர் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளோம்.

போதுமான எரிபொருள் கையிருப்பில் உள்ளதாக ஒன்றிய அரசின் சார்பில் தெரிவிக்கப்பட்டு வரும் நிலையில், பொதுமக்கள் யாரும் அச்சப்படவோ பதற்றம் கொள்ளவோ வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறேன். இந்நேரத்தில் ஒன்றிய அரசு மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்குத் துணை நின்று மேற்காசியப் போர்ச்சூழலை எதிர்கொள்வோம்" எனத் தெரிவித்துள்ளார்.

## மதுரை எய்ம்ஸில் 47% கட்டுமானப் பணிகள் மட்டுமே முடிந்துள்ளது : ஆர்டிஐயில் தகவல்

மதுரை: மார்ச்.13-

மதுரையில் எய்ம்ஸ் கட்டுமானப் பணிகள் 47 சதவீதம் தான் நடைபெற்றுள்ளது என்ற தகவல் ஆர்டிஐ மூலம் கிடைத்துள்ளது.

தென்காசி மாவட்டம் பாவூர் சத்திரம் அருகே உள்ள திப்பணம்பட்டியை சார்ந்த சமூக ஆர்வலர் பாண்டிய ராஜா மத்திய சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகத்திடம் மதுரை எய்ம்ஸ் குறித்து பல்வேறு கேள்விகளை எழுப்பி இருந்தார்.

அதற்கு மத்திய சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் தலைமை பொது தகவல் அலுவலர் தர்ம் பீர் குமார் சிங் பதில் அளித்துள்ளார்.

அதில், மதுரை எய்ம்ஸ் கட்டுமானப் பணிகள் 47 % நிறைவு பெற்றுள்ளது எனவும், மதுரை எய்ம்ஸ் மொத்த திட்ட மதிப்பீடு ரூ.2,021.51 கோடி எனவும், அதில் ரூ.471.02 கோடி மத்திய பட்ஜெட்டில் இருந்து வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அக்டோபர் 2026 ல் மதுரை எய்ம்ஸ் கட்டுமானப் பணிகளை முடிக்க இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளதாகவும்" தலைமை பொது தகவல் அலுவலர் தெரிவித்துள்ளார்.



■ மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் பெரம்பலூர் மாவட்டத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் நடைபெற்ற சமூக நீதிக்காவலர் திரு.வே.ஆனைமுத்து அவர்களின் நூற்றாண்டு விழாவில் பெரம்பலூர் மாவட்டத்தில் 34.03 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 411 முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்து, 44.67 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 315 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பெரம்பலூர் மாவட்டத்தை சேர்ந்த 4,182 பயனாளிகளுக்கு 102.40 கோடி ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் திரு.சா.சி.சிவசங்கர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு.ஆ.இராசா, திரு.கே.என்.அருண்நேரு, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.ம.பிரபாகரன், கு.சின்னப்பா, திரு.கா.சொ.க.கண்ணன், ஆளுர் ஷாநவாஸ், சிறப்புத் திட்ட செயலாக்கத்துறையின் கூடுதல் செயலாளர் வே.விஷ்ணு, மாவட்ட ஆட்சித்தலைவர்கள் திருமதி ந.மிருணாளினி, (பெரம்பலூர்), அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.








## பூண்டி கிழக்கு ஒன்றியம் கச்சூரில் உலக மகளிர் தின விழா மற்றும் புதிய பேருந்து நிழற் கட்டிடம் திறப்பு விழா



திருவள்ளூர், மார்ச்.13-

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் கும்மிடிப்பூண்டி தொகுதி பூண்டி ஒன்றியம் கச்சூர் ஊராட்சியில் 11.03.2026 அன்று காலை 10:30 மணியளவில் சட்டமன்ற உறுப்பினர் நிதி ரூபாய் 10 லட்சம் மதிப்பீட்டில் கச்சூரில் புதியதாக கட்டப்பட்ட பேருந்து நிழற் கட்டிடத்தை சட்டமன்ற உறுப்பினர் டி.ஜே. கோவிந்தராஜன் கலந்துகொண்டு ரிப்பன் வெட்டி திறந்து அதனைத் தொடர்ந்து ஸ்ரீதேவி திருமண மஹாலில் நடைபெற்ற சமூகசேவகி தமிழ்ச்செல்வி முன்னிலையில் நடைபெற்ற முத்தமிழ் கிராம வளர்ச்சி நிறுவனம் சார்பில் உலக மகளிர் தின விழாவில் கலந்துகொண்டு குத்துவிளக்கேற்றி விழாவை துவக்கி வைத்து வாழ்த்துரை வழங்கி 300க்கும் மேற்பட்ட மகளிர்க்கு சேலை மற்றும் அறுசுவை உணவு மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்

இந்நிகழ்ச்சியில் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக இளைஞரணி துணை அமைப்பாளரும் பேரீட்டுவாக்கம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவரும் வழக்கறிஞருமான தில்லைகுமார், ஸ்ரீதேவி திருமண மண்டபம் உரிமையாளரும் சமூக சேவகருமான பாஸ்கர்ராவ், ஊத்துக்கோட்டை வணிகர் சங்க செயலாளர் செல்வகுமார், விஷிஸிஞ் ழிநிளி இளங்கோவன், போந்தவாக்கம் பேங்க் ஆப் இந்தியா வங்கியின் கிளை மேலாளர் சரத்குமார், பெண்கள் வளர்ச்சி நிறுவன இயக்குனர் ரி.ஸி.ரேனுகா, ஊத்துக்கோட்டை அழகு நிலையம் உரிமையாளர் சிரிஷா ரவிக்குமார், ஊத்துக்கோட்டை பேரூராட்சி தலைவர் அப்துல்ரஷித் மற்றும் சிறுபான்மை பிரிவு மாவட்டத்துணை அமைப்பாளர் சம்சுதீன், மற்றும் அமைப்பு சாரா ஓட்டுனர் அணி முன்னால் மாவட்ட அமைப்பாளரும் கவுன்சிலருமான கோல்டுமணி, மூத்த வழக்கறிஞர் வெஸ்லி, சமூகசேவகர் வழக்கறிஞர் லையன்தி லீப்குமார் கவுன்சிலர்கள் கோகுலகிருஷ்ணன் ஜீவா, பேரூர் இளைஞரணி அமைப்பாளர் ரஹீம், துணையான அமைப்பாளர் ஞி.அருண் மற்றும் பாபு அப்துல்பரீத் பூண்டி வடக்கு ஒன்றிய மாவட்ட பிரிதிநிதி ஞி.சீனிவாசலு மற்றும் வெங்கடாதிரி கச்சூர் கிளை கழக பொறுப்பாளர்கள் யோவான், ரவி, கிருஷ்ணமூர்த்தி, நந்திமங்களம் கிளை பொறுப்பாளர்கள் டார்த்தி மற்றும் விஜயன் கலந்துகொண்டு சிறப்பித்தனர்



■ நீலகிரி மாவட்டம் உதகை, பிரிக்ஸ் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வினை மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருநாவுக்கரசு உட்பட பலர் உள்ளனர்.

## நீலகிரிமாவட்டம்பந்தலூர்கப்பாலாஅரசுஆரம்ப சுகாதார நிலையத்தில்மறதிபாதிப்புகள்குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி



நீலகிரி, மார்ச்.13-

நீலகிரி மாவட்டம் பந்தலூர் அருகே கப்பாலா அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மறதி பாதிப்புகள் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

கப்பாலா அரசு ஆரம்ப சுகாதார நிலையம், ஆல் தி சில்ரன், கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம் ஆகியன சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு ஆல் தி சில்ட்ரன் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அஜித் முன்னிலை வகித்தார். நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கிய அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர் ஜனார்த்தனன் பேசும்போது மறதி நோய் பரவலாக வயதானவர்களிடம் ஏற்படுகிறது. குறிப்பாக தெரிந்த இடங்களிலேயே வழி தவறுவது அல்லது நேரத்தையும் கிழமைகள் போன்றவற்றில் குழப்பம், பொருட்களின் பெயர் மறத்தல், காரணம் இல்லாமல் கோபப்படுவது, பயப்படுவது அல்லது அதிக கவலை அடைவது போன்ற பாதிப்புகள் ஏற்படும். வயதாகும்போது நமது உடலில் புரதச்சத்து குறைவதனாலும், சர்க்கரை நோய், இரத்த அழுத்தம், பக்கவாதம் போன்றவற்றால் செல்கள் செயல் இழப்பு காரணமாகவும், மறதி என்பது அதிகமாக வருகிறது. தொடர்ந்து மருத்துவ ஆலோசனை எடுத்துக்கொள்ளாமல் தவிர்த்தல் அல்சைமர் ஆக மாறும். இதனை தவிர்க்க ஆரோக்கியமான செயல்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். என்றார்.

கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம் செயலாளர் சிவசுப்பிரமணியம் பேசும்போது தூக்கம் குறைவு, அதிக நேரம் மொபைல் பார்த்தல் போன்றவற்றாலும் மறதி அதிகம் ஏற்படுகிறது. காய்கறிகள், பழங்கள் மற்றும் ஒமேகா 3, வைட்டமின் பி 12 நிறைந்த உணவுகள் மூளை ஆரோக்கியத்திற்கு நல்லது.

உடற்பயிற்சி, தியானம், சரியான அளவு தூக்கம் போன்றவை மறதி பாதிப்பை தவிர்க்க உதவும் என்றார்

நிகழ்ச்சியில் செவிலியர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் 2026ஐ முன்னிட்டு தேர்தல் நடத்தும் அலுவலர்கள், உதவி தேர்தல் நடத்தும்பயிற்சி




தேனி மாவட்டம் மார்ச். 13-

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் 2026 ஐ முன்னிட்டு தேர்தல் நடத்தும் அலுவலர்கள், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள், கண்காணிப்பு அலுவலர்கள் மற்றும் மண்டல அலுவலர்கள்/ உதவி மண்டல அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், தலைமையில் நடைபெற்றது.

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக புதிய கூட்டரங்கில் தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2026 ஐ முன்னிட்டு தேர்தல் நடத்தும் அலுவலர்கள், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள். கண்காணிப்பு அலுவலர்கள் மற்றும் மண்டல அலுவலர்கள் உதவி மண்டல அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத்சிங் தலைமையில் நடைபெற்றது.

தேர்தல் ஆணையத்தின் விதிமுறைகளின்படி, தேர்தல் பணிகளில் ஈடுபடும் அலுவலர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட பணிகளை முழு பொறுப்புணர்வுடன் மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது. தேர்தல் காலத்தில் அமல்படுத்தப்படும் நடத்தை விதிமுறைகள் (Code of Conduct) குறித்து அலுவலர்களுக்கு தெளிவான விளக்கங்கள் அளிக்கப்பட்டன. அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் மேற்கொள்ளும் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள் சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டவையாக உள்ளதா என்பதை கண்காணித்து, அவ்வாறு விதிமுறைகள் மீறப்பட்டால் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது.

மண்டல அலுவலர்கள் மற்றும் உதவி மண்டல அலுவலர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வாக்குச்சாவடிகள் மற்றும் பகுதிகளை தொடர்ந்து கண்காணித்து, தேர்தல் பணிகள் சீராக நடைபெறுவதை உறுதி செய்ய வேண்டும் என்றும், வாக்குச்சாவடிகளில் தேவையான அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளதா என்பதை முன்கூட்டியே ஆய்வு செய்ய வேண்டும் என்றும், மேலும், மாற்றுத்திறனாளிகள். முதியவர்கள் மற்றும் கர்ப்பிணிப் பெண்கள் உள்ளிட்ட அனைத்து வாக்காளர்களும் சிரமமின்றி வாக்களிக்கும் வகையில் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது. வாக்காளர் பட்டியல் தொடர்பான நடவடிக்கைகள், வாக்குச்சாவடி ஏற்பாடுகள், வாக்குப்பதிவு நாளில் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள், வாக்குப்பதிவு இயந்திரங்கள் (EVM) மற்றும் வாக்காளர் சரிபார்ப்பு இயந்திரங்களின் (VVPAT) முறையான பாதுகாப்பு மற்றும் கையாளுவது தொடர்பான வழிமுறைகள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

மேலும், வாக்காளர்கள் எந்தவித அச்சமுமின்றி சுதந்திரமாக வாக்களிக்கக்கூடிய சூழலை உருவாக்குவது அலுவலர்களின் முக்கிய பொறுப்பாகும் என்றும் தேர்தல் காலத்தில் ஏற்படக்கூடிய புகார்கள் மற்றும் பிரச்சினைகள் குறித்து உடனடியாக நடவடிக்கை எடுத்து தீர்வு கான வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது.

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் 2026 பணிகளில், அலுவலர்கள் தங்கள் பொறுப்புக்களை உணர்ந்து சிறப்புடன் தேர்தல் பணிகளை மேற்கொண்டு சுமூகமான முறையில் பணியாற்ற வேண்டும் என சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாவட்ட தேர்தல் அலுவலர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இப்பயிற்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் .ப.ராஜகுமார். தேர்தல் நடத்தும் அலுவலர் / பெரியகுளம் சார் ஆட்சியர் .ரஜத் பீடன்,மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் தமிழரசி, தேர்தல் நடத்தும் அலுவலர் /தனித்துணை ஆட்சியர்(ச.பா.தி.) கவிதா, தேர்தல் நடத்தும் அலுவலர் / மாவட்ட வழங்கல் அலுவலர். நல்லையா, வட்டாட்சியர் (தேர்தல்).சுருளி மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் /அனைத்து வட்டாட்சியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்



## நீலகிரி மாவட்டம் அருவங்காடு பகுதியில் பொன்விழா ஆண்டு மாரத்தான்

நீலகிரி மார்ச்.13-

நீலகிரி மாவட்டம் அருவங்காடு வெடி மருந்து தொழிற்சாலையில் நேஷனல் எம்ப்ளாயி யூனியன் தொடங்கப்பட்டு 50 ஆண்டுகள் நிறைவு பெற்றதை கொண்டாடும் வகையாக என் யு இ சங்கம் மூலம் மாவட்ட அளவிலான மாரத்தான் போட்டி அருவங்காட்டில் நடைபெற்றது இந்த போட்டியை அருவங்காடு வெடி மருந்து தொழிலக ஸ்போர்ட்ஸ் ஆபிசர் டி எல் வி எஸ். சங்கர் கொடியசைத்து போட்டியை துவங்கி வைத்தார் உடன் சங்கத் தலைவர் ஜோசி லாசர் செயலாளர் திலீப் குமார் அசோகன் மற்றும் நிர்வாகிகள் இருந்தனர் இதில் குழந்தைகளுக்கான ஓட்டம் பள்ளிக் குழந்தைகளுக்கான ஓட்டம் ஆடவர் ஓட்டம் பெண்கள் ஓட்டம் 60 வயதை கடந்த மூத்த வீரர்களுக்கான ஓட்டம் என பல்வேறு பிரிவுகளாக போட்டிகள் நடத்தப்பட்டன போட்டியில் பங்கேற்ற அனைவருக்கும் சான்றிதழ் மற்றும் பதக்கம் வழங்கப்பட்டது முதல் மூன்று இடம் பிடித்த வீராங்கனைகளுக்கு வருகிற இருபதாம் தேதி சங்கத்தின் பொன்விழா நிகழ்ச்சியில் பண முடிப்பு பரிசாக வழங்கப்படும் என்று சங்க நிர்வாகிகள் தெரிவித்தனர் இதற்கான ஏற்பாடுகளை என் இ யு நிர்வாகிகள் செய்திருந்தனர்.



## பஞ்சாப் அசோசியேஷனின் அண்ணா ஆதர்ஷ் மகளிர் கல்லூரியில் தேசிய அளவிலான மாநாடு

சென்னை, மார்ச்.13-

சென்னை அண்ணா நகரில் உள்ள பஞ்சாப் அசோசியேஷனின் அண்ணா ஆதர்ஷ் மகளிர் கல்லூரியில் முதுகலை சமூகப் பணித்துறை சார்பாக, 'சமூக நிறுவனங்களை மறுபரிசீலனை செய்தல்' என்ற தலைப்பில் தேசிய அளவிலான மாநாடு 10 மார்ச் 2026 நடைபெற்றது.

விழாவில் தமிழ்நாடு மாநில மகளிர் ஆணைய தலைவர் திருமதி. குமாரி அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

பெண்கள் எதிர்கொள்ளும் பல்வேறு வன்முறைகள் பற்றிய விழிப்புணர்வையும் பெண்கள் தங்களை பொருளாதார ரீதியாகவும் மனரீதியாகவும் வலிமையாக வைத்துக்கொள்ள வேண்டியதன் அவசியத்தை பற்றியும் பேசினார்.

நிகழ்வில் கல்லூரி முதல்வர் முனைவர் ஷெர்லின் டேவிட் துணை முதல்வர் முனைவர் மீனாகுமாரி, சமூகப் பணித்துறையின் தலைவர் முனைவர் நேத்ராவதி, உதவி பேராசிரியர்கள் திருமதி மேரி ஷீனா, செல்வி. அபிநயா, திருமதி இலக்கியா மற்றும் பல்துறை மாணவர்கள் கலந்து கொண்டனர்.

## 10ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வு நடைபெற்ற மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங்,நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்



தேனி மாவட்டம் மார்ச். 13-

தேனி மாவட்டம். மேரிமாதா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் 10ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வு நடைபெற்ற மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அரசு தமிழ்நாடு முழுவதும் பொதுத்தேர்வு 10 ஆம் வகுப்பு பொதுத்தேர்வு இன்று (11.03.2026) முதல் 06.04.2026 வரை நடைபெறவுள்ளது. தேனி மாவட்டத்தில் 199 பள்ளிகளைச் சேர்ந்த 7,206 மாணவர்களும், 6,951 மாணவியர்களும் மற்றும் தனித்தேர்வர்களாக 283 தேர்வர்கள் என மொத்தம் 14.440 தேர்வர்கள் 69 தேர்வு மையங்களில் 10 ஆம் வகுப்பு பொதுத்தேர்வு எழுத நுழைவு சீட்டு (Hall Ticket) வழங்கப்பட்டிருந்தது. தேர்வினை முறையாக நடத்துவதற்கு முதன்மைக் கண்காணிப்பாளர்கள், அலுவலர்கள். வழித்தட அலுவலர்கள், அறைக்கண்காணிப்பாளர்கள் மற்றும் பறக்கும்படை உறுப்பினர்கள் என மொத்தம் துறை 1313 ஆசிரியர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இன்று நடைபெற்ற தேர்வில் 7,087 மாணவர்களும், 6,893 மாணவிகளும் மற்றும் 265 தனித்தேர்வர்களும் என மொத்தம் 14,245 தேர்வர்கள் 10ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வினை எழுதினார்கள்.

மேரிமாதா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் மாணவ, மாணவியர்களுக்கு வினாத்தாள்கள் வழங்கப்பட்ட நேரம். குடிநீர் வசதி. மின்வசதி பாதுகாப்பு வசதி போன்ற அடிப்படை வசதிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மைய கண்காணிப்பாளர்களிடம் கேட்டறிந்ததோடு, தேர்வு மையங்களில் உள்ள கட்டுப்பாட்டு அறையினையும் பார்வையிட்டார்.

மேலும், தேர்வுக்கட்டுப்பாட்டு மையங்களிலிருந்து தேர்வு மையங்களுக்கு வினாத்தாள்களை கொண்டுசெல்லவும். மீள விடைத்தாள்களை தேர்வு மையங்களிலிருந்து விடைத்தாள் சேகரிப்பு மையத்திற்குகொண்டு செல்லும் வாகனங் களுக்கும் மற்றும் விடைத்தாள் சேகரிப்பு மைத்திற்கு 24 மணி நேரமும் காவலர்கள் கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனரா அலுவலர்களிடம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கேட்டறிந்தார். 61607 துறை



■ திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள எரிவாயு முகவர்கள், எண்ணெய் நிறுவன விற்பனை மேலாளர்கள், எல்.பி.ஜி (LPG) விற்பனை மேலாளர்கள் மற்றும் எண்ணெய் நிறுவன விநியோகஸ்தர்கள் ஆகியோர்களுடனான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் செ.சரவணன், தலைமையில் நடைபெற்றது.

# வேப்பனப்பள்ளி ஒன்றியத்தைச் சேர்ந்த மாற்றுக் கட்சியிலிருந்து 50க்கும் மேற்பட்டோர் அதிமுகவில் இணைவு - கே.பி.முனுசாமி முன்னிலையில் நடைபெற்றது

கிருஷ்ணகிரி, மார்ச். 13-

கிருஷ்ணகிரி மாவட்டம் வேப்பனப்பள்ளி கிழக்கு ஒன்றிய செயலாளர் கே.வி.ராமமூர்த்தி, இளைஞர் பாசறை ஒன்றிய செயலாளர் முகமது, மாணவர் அணி ஒன்றிய தலைவர் ஜுபேர் ஆகியோரின் ஏற்பாட்டில் திமுக, தாவெக உள்ளிட்ட மாற்றுக் கட்சிகளை சேர்ந்த 50க்கும் மேற்பட்டோர் அதிமுகவில் இணையும் நிகழ்ச்சி நடைபெற்றது.



இந்த நிகழ்ச்சி அதிமுக துணை பொதுச்செயலாளரும், வேப்பனப்பள்ளி சட்டமன்ற உறுப்பினருமான கே.பி.முனுசாமி எம்.எல்.ஏ. முன்னிலையில் நடைபெற்றது. அப்போது மாற்றுக் கட்சிகளில் இருந்து வந்தவர்கள் அதிமுக கொடியை ஏற்று தங்களை அதிகாரப்பூர்வமாக கட்சியில் இணைத்துக் கொண்டனர்.

நிகழ்ச்சியில் அதிமுக மேற்கு ஒன்றிய செயலாளர் சைலேஷ் கிருஷ்ணன், காவேரிப்பட்டணம் ஒன்றிய செயலாளர் பையூர் ரவி, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் கலில், அதிமுக நிர்வாகிகள் ரமேஷ், விஜய் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு புதிய உறுப்பினர்களை வரவேற்றனர்.

இந்த நிகழ்ச்சி வேப்பனப்பள்ளி பகுதியில் அதிமுகவுக்கு ஆதரவு அதிகரித்து வருவதை வெளிப்படுத்துவதாக கட்சி நிர்வாகிகள் தெரிவித்தனர்.

# மோரை வீராபுரம் உயர்நிலைப்பள்ளியில் 10ம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதும் மாணவர்களுக்கு வாழ்த்து

மாதவரம், மார்ச். 13-

திருவள்ளுர் மாவட்டம் மாதவரம் தொகுதி வில்லிவாக்கம் வடக்கு ஒன்றியம் மோரை ஊராட்சி வீராபுத்தில் இயங்கிவரும் அரசு உயர்நிலைப்பள்ளி தற்போது முதன்முறையாக 10ம் வகுப்பு பொதுத்தேர்வு மையம் அமைந்துள்ளது. இந்நிலையில் முன்னாள் மோரை ஊராட்சி மன்ற தலைவர் ஆர்.திவாகரன் நேரில் சென்று பள்ளியின் தலைமை ஆசிரியர் உள்ளிட்ட



சகஆசிரியர்களையும் மற்றும் 10ம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதும் அனைத்து மாணவர்களையும் வாழ்த்தினர். பின்னர் நினைவு பிரசுரங்களை வழங்கினர். இதில் முன்னாள் மோரை ஊராட்சி மன்ற துணைத் தலைவர் கார்த்திக் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

# பழனியில் 71 லட்சம்மதிப்பிலான நலத்திட்ட பணிகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு சட்டமன்ற உறுப்பினர் ஐ பி செந்தில்குமார் திறந்து வைத்தார்

திண்டுக்கல், மார்ச்.13-

திண்டுக்கல் மாவட்டம் பழனி நகரப் பகுதிகளில் 71 லட்சம் மதிப்பிலான முடிவுற்ற நலத்திட்ட பணிகளை பழனி சட்டமன்ற உறுப்பினர் ஐ பி செந்தில் குமார் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியில் நியாய விலைக் கடை வீட்டு வசதி வாரிய குடியிருப்பு பகுதியில் புதிய பேருந்து நிழல் குடை .உள்ளிட்ட முடிவுற்ற பணிகளை சட்டமன்ற உறுப்பினர் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் நகராட்சி ஆணையர் நகர் மன்ற தலைவர் .வட்டாட்சியர் கோட்டாட்சியர். நகர் மன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு அலுவலர்கள்





கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர் தங்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுத்த முதலமைச்சருக்கும் சட்டமன்ற உறுப்பினருக்கும் அப்பகுதி மக்கள் நன்றி தெரிவித்துக் கொண்டனர்.



# பையூரில் 100 அடி கொடிக்கம்பத்தில் நாளை கொடியேற்றம் முன்னேற்பாடு ஆலோசனை கூட்டம். மதியழகன் எம்எல்ஏ பங்கேற்பு

கிருஷ்ணகிரி, மார்ச் . 13-

கிருஷ்ணகிரி மாவட்டம் பையூர் நடேசன் கடை அருகே, தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு அமைக்கப்பட்டுள்ள 100 அடி கொடிக்கம்பத்தில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நாளை கொடியேற்ற உள்ளார். இதனை முன்னிட்டு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன், எம்எல்ஏ தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட அவை தலைவர் நாகராஜ், ஒன்றிய செயலாளர்கள் சுப்பிரமணி, மகேந்திரன், சரவணன்,மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் கே வி எஸ் சீனிவாசன், மாநில சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் சங்கர் தர்மன், நகர செயலாளர் ஜே கே எஸ் பாபு,மாவட்ட சுற்றுச்சூழல் அணி பாரி,மாவட்ட வர்த்தக அணி மணி விஜயன், ஒன்றிய அவை தலைவர் இளங்கோ, மாவட்ட பொருளாளர் கதிரவன், மாவட்ட துணைச் செயலாளர் கோவிந்தசாமி, மாவட்ட இளைஞரணி தினேஷ் ராஜன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு நிகழ்ச்சி ஏற்பாடுகள் குறித்து ஆலோசனை பெற்றனர்.



# தேர்தல் தேதி அறிவிக்கும் முன்பே சுவர் விளம்பரம் திமுகவினர் தீவிரம்

கிருஷ்ணகிரி, மார்ச். 13-

சட்டமன்றத் தேர்தல் தேதி இன்னும் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படாத நிலையில், கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் திமுகவினர் தேர்தல் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

காவேரிப்பட்டினம் மத்திய ஒன்றிய செயலாளர் தேங்காய் சுப்பிரமணி தலைமையில் பல கிராமங்களில் சுவர் விளம்பரங்கள் எழுதும் பணிகள் நடைபெற்று வருகின்றன. திமுக அரசின் கடந்த ஐந்தாண்டு கால ஆட்சியில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு வளர்ச்சி திட்டங்கள், நலத்திட்டங்கள் குறித்து பொதுமக்களுக்கு எடுத்துரைக்கும் வகையில் இந்த சுவர் விளம்பரங்கள் எழுதப்பட்டுள்ளன.

மேலும், பொதுமக்களை நேரடியாக சந்தித்து தமிழக அரசின் சாதனைகள் குறித்து விளக்கி, வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தலில் திமுக வேட்பாளர்களுக்கு ஆதரவாக உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களிக்குமாறு வாக்கு சேகரிப்பு பணிகளிலும் திமுக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் ஈடுபட்டு வருகின்றனர். இதேபோல் கிழக்கு ஒன்றிய செயலாளர் மகேந்திரன், மேற்கு ஒன்றிய செயலாளர் சரவணன் ஆகியோர் தலைமையிலும் கிராமப் பகுதிகளில் சுவர் விளம்பரங்கள் எழுதப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கைகள் மூலம் தேர்தல் தேதி அறிவிப்புக்கு முன்பே திமுகவினர் அடிப்படை நிலைகளில் தேர்தல் பணிகளை தீவிரப்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.



■ திண்டுக்கல் மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற "சர்வதேச மகளிர் தினம் 2026" கொண்டாட்ட நிகழ்வாக நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுப் பொருட்களையும், பாராட்டுச் சான்றிதழ்களையும் மாவட்ட ஆட்சித் தலைவர் செ.சரவணன் வழங்கினார். அருகில், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ஜெயபாரதி. உதவி ஆட்சியர் (பயிற்சி) ச.வினோதினி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி. கங்காதாரணி, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் திட்ட இயக்குநர் .சதீஸ்பாபு, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது)ர.கீர்த்தனா மணி அவர்கள் ஆகியோர் உட்பட அனைத்துத்துறை பெண் அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி வாகனமும் மற்றொரு காரும் மோதிய விபத்தில் பயிற்றுநர் உயிரிழப்பு

மதுரை, மார்ச்.13-

மதுரை மாவட்டம் கொட்டாம்பட்டி அருகே நான்கு வழிச்சாலையில், ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி வாகனமும் மற்றொரு காரும் மோதிய விபத்தில் பயிற்றுநர் நிகழ்விடத்திலேயே உயிரிழந்தார். ஓட்டுநர் பயிற்சிக்காக காரில் இருந்த நான்கு பேர் காயங்களுடன் மீட்கப்பட்டு மேலூர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்



# கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சமையல் எரிவாயு சிலிண்டர் விலை உயர்வு மற்றும் தட்டுப்பாடு- இல்லத்தரசிகள் வேதனை

கிருஷ்ணகிரி,மார்ச். 13-

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சமையல் எரிவாயு சிலிண்டர்களின் விலை உயர்வு மற்றும் தட்டுப்பாடு காரணமாக பொதுமக்கள், குறிப்பாக இல்லத்தரசிகள் கடும் சிரமத்தை எதிர்கொண்டு வருகின்றனர். இந்த பிரச்சினைக்கு மத்திய மற்றும் மாநில அரசுகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஈராக், அமெரிக்கா உள்ளிட்ட வளைகுடா நாடுகளில் ஏற்பட்டுள்ள யுத்த நிலைமை காரணமாக எரிவாயு விநியோகத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இதன் விளைவாக கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் கிடைப்பதில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே மத்திய அரசு வீடுகளில் பயன்படுத்தப்படும் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் மற்றும் வணிக பயன்பாட்டிற்கான சிலிண்டர்களின் விலையை உயர்த்தியுள்ளதால் பொதுமக்கள் கூடுதல் சுமையை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதன் காரணமாக கிருஷ்ணகிரி மாவட்டத்தின் பல பகுதிகளில் சாலை ஓரக்கடைகள் மற்றும் சிறிய ஹோட்டல்கள் எரிவாயு சிலிண்டர்கள்



கிடைக்காததால் செயல்பட முடியாமல் மூடப்பட்டு வருகின்றன. அதேபோல் வீடுகளில் பயன்படுத்தப்படும் சமையல் எரிவாயு சிலிண்டர்களும் கிடைக்காத நிலை ஏற்பட்டதால் இல்லத்தரசிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சிலிண்டர்களை முன்பதிவு (புக்கிங்) செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால், பலர் தங்களுடைய காலி சிலிண்டர்களுடன் நேரடியாக எரிவாயு விநியோக அலுவலகங்களுக்கு சென்று காத்திருக்கும் நிலையும் உருவாகியுள்ளது.

இது குறித்து இல்லத்தரசிகள் கூறுகையில், ஏற்கனவே விலைவாசி உயர்வால் ஏழை, எளிய மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டு உள்ளனர். இந்நிலையில் வளைகுடா நாடுகளில் ஏற்பட்டுள்ள யுத்தத்தை காரணமாக காட்டி சமையல் மற்றும் வணிக பயன்பாட்டிற்கான எரிவாயு சிலிண்டர்களின் விலையை உயர்த்துவது பொதுமக்களுக்கு மேலும் சுமையாக உள்ளது என தெரிவித்தனர்.

மேலும் கிருஷ்ணகிரி மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் எரிவாயு சிலிண்டர்கள் கிடைப்பது மிகவும் கடினமானதாக மாறியுள்ளதாகவும், இதனால் பொதுமக்கள் பெரும் சிரமத்தை சந்தித்து வருவதாகவும் தெரிவித்தனர். ஆகையால் மத்திய மற்றும் மாநில அரசுகள் உடனடியாக தலையிட்டு சமையலுக்கு தேவையான எரிவாயு சிலிண்டர்கள் தடையின்றி கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தேசிய அளவிலான செயற்கை நுண்ணறிவு (AI) கருத்தரங்கம் 2026

பல்லாவரம் மார்ச். 13-

செங்கல்பட்டு மாவட்டம் குரோம்பேட்டை ஸ்ரீமதி தேவ்குன்வர் நானாலால் பட் வைணவ மகளிர் கல்லூரி (SDNBVC), கடந்த மார்ச் 11 மற்றும் 12 ஆகிய தேதிகளில் "நாளைய புரட்சி: AIவழி உருமாற்றம்" (Revolutionizing Tomorrow: AI-Driven Transformation) என்ற தலைப்பில் தேசிய அளவிலான தொழில்கல்வித்துறை கருத்தரங்கை (National Industry-Academia Conclave 2026) மிகச் சிறப்பாக நடத்தியது முக்கிய நிகழ்வுகள் மற்றும் சிறப்புரைகள் இரண்டு நாட்கள் நடைபெற்ற இந்த மாநாட்டில் தொழில்துறை தலைவர்கள், ஆராய்ச்சியாளர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவிகள் எனப் பலரும் கலந்துகொண்டு, கல்வி மற்றும் சமூகத்தில் செயற்கை நுண்ணறிவின் தாக்கம்




குறித்து விவாதித்தனர் தொழில்நுட்பத் தற்சார்பு விழாவைத் தொடக்கி வைத்து உரையாற்றிய சென்னை ஐஐடி (IIT Madras) இயக்குநர் டாக்டர் காமகோடி இந்தியாவின் விழுமியங்களைப் பிரதிபலிக்கும் வகையில் நமக்கான சொந்த கிமி மாதிரிகளை உருவாக்குவதன் அவசியத்தை வலியுறுத்தினார். மேலும், தேசிய கல்விக்கொள்கை 2020 ன் இலக்குகளை அடையவும், தாய்மொழியில் கற்றலை எளிதாக்கவும் கிமி ஒரு சிறந்த 'துணை விமானி' (Co-pilot) போலச் செயல்படும் என்று குறிப்பிட்டார். மனித ஆற்றலை மேம்படுத்துதல்: கேபிஎம்ஜி (KPMG) நிறுவனத்தின் கல்வி மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை தேசியத் தலைவர் திரு. நாராயணன் ராமசாமி தனது சிறப்புரையில், கிமி என்பது வேலைவாய்ப்பிற்கு அச்சுறுத்தல் அல்ல, அது மனிதத் திறனை மேம்படுத்தி கண்டுபிடிப்புகளை வேகப்படுத்தும் ஒரு உருமாற்றத் தொழில்நுட்பம் என்று கூறினார். தொழில்துறை மற்றும் கல்வித்துறையின் இணைப்பு இந்தக் கருத்தரங்கில் ஐஐடி (IIT), என்ஐடி (NITK), விஐடி (VIT) போன்ற முன்னணி கல்வி நிறுவனங்களின் நிபுணர்களும், KPMG, CTS, HCL, TCS, Accenture, Tech Mahindra, Pay Pal, கினீazon Alexa, Verizon போன்ற சர்வதேச நிறுவனங்களின் வல்லுநர்களும் பங்கேற்றுத் தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர். சிறப்பு அம்சங்கள்: ஆசிரியர்களுக்கான பயிற்சி: கல்வி கற்பித்தலில் கிமி கருவிகளைப் பயன்படுத்துவது குறித்த நேரடிப் பயிற்சிப் பட்டறை நடைபெற்றது. ஆய்வுக் கட்டுரைகள் கல்வியில் கிமின் பயன்பாடு குறித்த ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன மாணவியர் கலந்துரையாடல்: மாணவிகளின் படைப்பாற்றல் மற்றும் தலைமைத்துவப் பண்புகளை ஊக்குவிக்கும் வகையில் கலந்துரையாடல் அமர்வுகள் ஒருங்கிணைக்கப்பட்டன. எதிர்காலத்திற்கான முன்னெடுப்பு பெண் மாணவிகளை எதிர்காலத் தொழில்நுட்பத் திறன்களுடன் தயார்படுத்துவதில் ஸ்ரீமதி தேவ்குன்வர் நானாலால் பட் வைணவ மகளிர் கல்லூரி கொண்டுள்ள அர்ப்பணிப்பை இந்த நிகழ்வு உறுதிப்படுத்தியது.

இடமிருந்து வலம் : சுயநிதிப்பிரிவின் துணை முதல்வர் டாக்டர் கலைவாணி, மினிகிசி இயக்குநர் டாக்டர் சுஜாதா. கல்லூரியின் தலைவர் மம்தா டி. பட், சென்னை ஐஐடி (மிமிஜி விணீபீக்ஷீணீs) இயக்குநர் டாக்டர் காமகோடி, கேபிஎம்ஜி (ரிறிவிநி) நிறுவனத்தின் கல்வி மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை தேசியத் தலைவர் நாராயணன் ராமசாமி, கல்லூரியின் கல்விச் செயலாளர் நிமிஷ் டோலியா, சுயநிதிப் பிரிவின் இயக்குநர் டாக்டர் விஜயா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்

# தாயமங்கலம் முத்துமாரியம்மன் கோவில்: மார்ச் 29ல் கொடியேற்றத்துடன் பங்குனித் திருவிழா தொடக்கம்



இளையான்குடி மார்ச். 13-

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி அருகே உள்ள பிரசித்தி பெற்ற தாயமங்கலம் அருள்மிகு முத்துமாரியம்மன் கோவில் பங்குனித் திருவிழா, வரும் மார்ச் 29ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்க உள்ளது.

முக்கிய நிகழ்வுகள்:

* மார்ச் 29: காலை 10:30 மணியிலிருந்து 12:00 மணிக்குள் கொடியேற்றம் நடைபெற்று, காப்புக்கட்டுதலுடன் விழா முறைப்படி தொடங்குகிறது.

* விழா நாட்கள்: பத்து நாட்கள் நடைபெறும் இந்த விழாவில் தினமும் அம்மன் பல்வேறு வாகனங்களில் வீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலிப்பார்.

* பரிவாரங்கள்: விழாவின் முக்கிய நிகழ்வாக எட்டாம் நாள் தேரோட்டமும், ஒன்பதாம் நாள் பால்குடம் எடுத்தல் மற்றும் பூக்குழி இறங்குதல் போன்ற நேர்த்திக்கடன்களும் நடைபெறும்.

முன்னேற்பாடுகள்:

விழாவிற்கு தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருவார்கள் என்பதால், மாவட்ட நிர்வாகம் மற்றும் கோவில் நிர்வாகம் சார்பில் குடிநீர், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு வசதிகள் செய்யப்பட உள்ளன.





# புதிய திட்ட பணிகள் அடிக்கல் நாட்டு விழா முடிவுற்ற பணிகள் திறப்பு விழா மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

பெரம்பலூர், மார்ச். 13-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவின்படி, பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்ட மக்களின் வாழ்வில் மாபெரும் ஏற்றத்தை ஏற்படுத்தும் வகையிலான சமூக நீதிக்காவலர் வே.ஆனைமுத்து நூற்றாண்டு விழா பெரம்பலூர், அரியலூர் மாவட்ட நிர்வாகங்கள் சார்பில் புதிய திட்ட பணிகள் அடிக்கல் நாட்டு விழா முடிவுற்ற பணிகள் திறப்பு விழா மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா பெரம்பலூரில் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

பெரம்பலூர் மாவட்டம், குன்னம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட முருக்கன்குடி கிராமத்தைச் சேர்ந்த சமூக நீதிக்காவலர் வே.ஆனைமுத்து அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நடைபெற்ற இந்த எழுச்சிமிகு விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர், இளம் தலைவர் மரியாதைக்குரிய Udhaya-nidhi Stalin அவர்கள் தலைமையேற்று, அய்யா ஆனைமுத்து அவர்களின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் புகைப்படக் கண்காட்சியைத் திறந்து வைத்து, நூற்றாண்டு விழா மலரை வெளியிட்டுச் சிறப்பித்தார்.

மேலும், இரு மாவட்டங்களைச் சேர்ந்த மொத்தம் 10,127 பயனாளிகளுக்கு ரூ.280 கோடி மதிப்பிலான (பெரம்பலூர் மாவட்டத்தில் 4,182 பயனாளிகளுக்கு ரூ.102.40 கோடியும், அரியலூர் மாவட்டத்தில் 5,945 பயனாளிகளுக்கு ரூ.177.87 கோடியும்) அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கியதோடு, ரூ.44.67 கோடி மதிப்பிலான 315 பல்வேறு புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், ரூ.34.03 கோடி மதிப்பிலான 411 முடிவுற்ற பணிகளை மக்கள் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தும் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்பித்தார்.

இந்நிகழ்வில் மேனாள் ஒன்றிய அமைச்சர்,நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா முன்னிலை வகித்தார். விழாவில், போக்குவரத்து துறை மற்றும் மின்சார துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.என் அருண் நேரு, பெரம்பலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மிருணாளினி, அரியலூர் மாவட்ட ஆட்சியர் இரத்தினசாமி,

பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், நாகப்பட்டினம் சட்டமன்ற உறுப்பினர் ஆளூர் ஷாநவாஸ் உள்ளிட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள் அரசு அலுவலர்கள்,ஆனைமுத்து குடும்பத்தார்கள், திமுக கழக நிர்வாகிகள் மற்றும் பயனாளிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# கம்பம் போக்குவரத்து காவல் ஆய்வாளராக அ.தங்கமணி பொறுப்பேற்பு



கம்பம் மார்ச்.13

தேனி மாவட்டம், கம்பம் போக்குவரத்து காவல் நிலையத்தில் புதிய காவல் ஆய்வாளராக அ.தங்கமணி நேற்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

முந்தைய பணிகள் மற்றும் சிறப்புகள்:

இவர் இதற்கு முன் மதுரை மாநகரில் பல்வேறு நிலைகளில் சிறப்பாகப் பணியாற்றியவர். குறிப்பாக

* மதுரையில் பணியாற்றிய போது பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த பல முன்னோடித் திட்டங்களை முன்னின்று நடத்தினார்.

* தனது கடமையை கண்ணும் கருத்துமாகச் செய்ததற்காக மதுரை மாநகர காவல் ஆணையரிடம் பல்வேறு விருதுகளையும் பாராட்டுக்களையும் பெற்றுள்ளார்.

* இறுதியாக, மதுரை திலகர் திடல் போக்குவரத்து ஆய்வாளராகப் பணியாற்றி, அப்பகுதியில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கவும் விதிகளை அமல்படுத்தவும் சிறப்பாகச் செயல்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது கம்பம் போக்குவரத்து காவல் ஆய்வாளராகப் பொறுப்பேற்றுள்ள இவருக்கு, பல்வேறு தரப்பினரும் தங்களது வாழ்த்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

# சென்னையில் ஐஸ்வர்யா மருத்துவமனையின் அதிநவீன புற்றுநோய் மையம்

## நடிகர் சத்யராஜ் திறந்து வைத்தார்







சென்னை மார்ச். 13-

சென்னை, 08 மார்ச் 2026: மாலை 4 : 00 மணிக்கு அதிநவீன புற்றுநோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சைக்கான சேவையை மேலும் மேம்படுத்தும் விதமாக, ஐஸ்வர்யா மருத்துவமனை தனது ஓ.எம்.ஆர்., தரமணி வளாகத்தில் ஐஸ்வர்யா புற்றுநோய் மையத்தை திறந்தது. இதை நடிகர் சத்யராஜ் திறந்து வைத்தார்.

இதன் மூலம், துல்லியமான கதிர்வீச்சு சிகிச்சை, இம்யூனோதெரபி, சிக்கலான புற்றுநோய் அறுவை சிகிச்சைகள் மற்றும் செயற்கை நுண்ணறிவு மூலம் இயங்கும் பெட்சிடி ஸ்கேன் உள்ளிட்ட மேம்பட்ட சேவைகளை இந்த மையம் அறிமுகப்படுத்துகிறது. இது புற்றுநோயை ஆரம்ப நிலையிலேயே மிகத் துல்லியமாகக் கண்டறிய உதவும்.

நிகழ்ச்சியில், ஐஸ்வர்யா மருத்துவமனையின் தலைமைச் செயல் அதிகாரி டாக்டர்., எஸ். ராஜசுந்தரம், நிர்வாக இயக்குனர் டாக்டர்., அருண் முத்துவேல் மற்றும் மருத்துவமனையின் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த சிறப்புப் புற்றுநோய் மருத்துவக் குழுவினர் உட்பட ஏராளமான பேர் கலந்து கொண்டனர்.

செயற்கை நுண்ணறிவுடன் கூடிய பெட்சிடி ஸ்கேன் மற்றும் துல்லியமான கதிர்வீச்சு சிகிச்சை எந்திரங்கள் போன்ற மேம்பட்ட தொழில்நுட்பங்கள் மூலம் இந்த மையம் மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளது. இவை புற்றுநோயைக் கண்டறிதல், அதன் நிலையை அறிதல் மற்றும் சிகிச்சையளித்தல் ஆகியவற்றை மேம்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. மேலும், புற்றுநோய் செல்களை எளிதில் கண்டறிந்து அவற்றை எதிர்த்துப் போராட உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் மேம்பட்ட சிகிச்சை முறையான 'இம்யூனோதெரபி' சிகிச்சையும் இங்கு வழங்கப்படுகிறது.

திறப்பு விழாவில் ஐஸ்வர்யா மருத்துவமனையின் தலைமை செயல் அதிகாரி டாக்டர் எஸ். ராஜசுந்தரம் பேசுகையில், "இந்தியாவில் புற்றுநோய் ஒரு மிகப்பெரிய சுகாதார சவாலாகத் தொடர்கிறது. இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் மற்றும் தேசிய புற்றுநோய் பதிவேட்டுத் திட்டத்தின்படி, 2025ம் ஆண்டில் புதிய புற்றுநோய் பாதிப்புகள் சுமார் 15 லட்சத்து 70 ஆயிரமாக அதிகரிக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. இதில் மார்பக, நுரையீரல் மற்றும் வாய் புற்றுநோய்களே அதிக அளவில் காணப்படுகின்றன. ஓஎம்ஆர் தரமணியில் ஐஸ்வர்யா புற்றுநோய் மையம் திறக்கப்பட்டுள்ளதன் மூலம், சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள நோயாளிகளுக்குத் தேவையான நேரத்தில் நோயைக் கண்டறிதல், மேம்பட்ட சிகிச்சைகள், சிக்கலான புற்றுநோய் அறுவை சிகிச்சைகள், துல்லியமான கதிர்வீச்சு சிகிச்சை, இம்யூனோதெரபி மற்றும் பல்துறை புற்றுநோய் சிகிச்சைகள் ஆகியவற்றை ஒரே இடத்தில் வழங்குவதற்கான தனது நோக்கத்தை இந்த மருத்துவமனை மேலும் வலுப்படுத்தியுள்ளது.

# விவசாயிகளை தாக்கும் 'காரணமறியாத சிறுநீரக நோய்' : 10,000 விவசாயிகளுக்கு பரிசோதனை திட்டம்



தஞ்சாவூர், மார்ச்.13

காவேரி டெல்டா பகுதிகளில் விவசாயிகளிடையே அதிகரித்து வரும் 'காரணமறியப்படாத நாள்பட்ட சிறுநீரக நோய்' (CKDu) பாதிப்பை தடுக்கும் வகையில் தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனை சிறப்பு விழிப்புணர்வு மற்றும் பரிசோதனை திட்டத்தை தொடங்கியுள்ளது.

சர்க்கரை நோய் அல்லது உயர் இரத்த அழுத்தம் போன்ற வழக்கமான காரணங்கள் இல்லாமல் ஏற்படும் இந்த நோய், குறிப்பாக விவசாயத் தொழிலாளர்களிடையே அதிகமாக காணப்படுவது கவலைக்குரியதாக உள்ளது. இதனை முன்னிட்டு விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும், ஆரம்ப கட்டத்திலேயே நோயை கண்டறியவும் மருத்துவமனை சார்பில் சிறப்பு மருத்துவக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் மூலம் ஒரு ஆண்டுக்குள் காவேரி டெல்டா மாவட்டங்களைச் சேர்ந்த 10,000க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு சிறுநீரக நோய்க்கான பரிசோதனைகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

உலக சிறுநீரக தினத்தை முன்னிட்டு தொடங்கப்பட்ட இந்த முயற்சி, விவசாயிகளிடையே அதிகரித்து வரும் CKDu பாதிப்பை கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் செயல்படுத்தப்படுகிறது.

இதுகுறித்து மீனாட்சி மருத்துவமனையின் சிறுநீரகவியல் நிபுணர் டாக்டர் எஸ். கௌரிசங்கர் கூறுகையில், "அதிக வெப்ப அழுத்தம், நீர்ச்சத்து குறைபாடு, விவசாய ரசாயனப் பொருட்கள் பயன்பாடு, மாசடைந்த நீர் போன்ற காரணிகள் இந்த நோய்க்கு முக்கிய காரணங்களாக இருக்கலாம். பெரும்பாலும் அறிகுறிகள் இல்லாமல் நோய் முன்னேறுவதால் ஆரம்ப கட்ட பரிசோதனைகள் மிகவும் அவசியம்" என்றார்.

மேலும் சமூக விழிப்புணர்வு மற்றும் தொடக்க நிலையில் பரிசோதனை மூலம் இந்த நோயின் தாக்கத்தை குறைப்பதே மருத்துவமனையின் நோக்கமாக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

உலகளவில் 85 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் நாள்பட்ட சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், சிறுநீரக ஆரோக்கியத்தை பாதுகாக்க சர்க்கரை மற்றும் இரத்த அழுத்த கட்டுப்பாடு, போதிய தண்ணீர் அருந்துதல், உடற்பயிற்சி மற்றும் உப்பு குறைந்த உணவு முறைகளை பின்பற்ற வேண்டும் என்றும் மருத்துவர்கள் அறிவுறுத்தினர்.

இந்த பத்திரிகையாளர் சந்திப்பில் மருத்துவமனையின் துணை மருத்துவக் கண்காணிப்பாளர் டாக்டர் வி. பிரவீன் மற்றும் சிறுநீரகவியல் இணை ஆலோசகர் டாக்டர் எஸ். கேதார கௌரி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்



■ பெரம்பலூர் மாவட்டத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வருகைத் தந்த துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு அளித்த பெரம்பலூர் மாவட்ட கழக நிர்வாகிகள் இளைஞரணி தம்பிமார்கள் கழக உடன்பிறப்புகள் பொதுமக்கள் திமுக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# அமெரிக்காவில் மனைவியை கொன்ற இந்தியர் பற்றி துப்பு தந்தால் ரூ.9 கோடி பரிசு தரப்படும்

நியூயார்க், மார்ச்.13-

அமெரிக்காவின் மேரிலாந்தில் ஹனோவரில் கடந்த 2015ம் ஆண்டு ஏப்ரல் 12ம் தேதி டோனட் கடையில் கொடூர கொலை நடந்தது. பத்ரேஷ்குமார் சேத்தன்பாய் படேல் (35) என்ற இந்தியர் தனது மனைவி பாலக் படேலை (21) கத்தியால் பலமுறை குத்திக் கொலை செய்து விட்டு கடையின் பின்வாசல் வழியாக தப்பினார். 11 ஆண்டாகியும் படேல் எங்கிருக்கிறார், இந்தியா அல்லது கனடாவுக்கு தப்பி விட்டாரா என எப்பிஐயால் கண்டுபிடிக்க முடியவில்லை. பத்ரேஷ்குமார் படேல் பற்றி தகவல் தந்தால் ரூ.2.25 கோடி பரிசுத்தொகை அறிவித்தும் எந்த பலனும் இல்லை. இந்நிலையில், படேல் குறித்து தகவல் தருவோருக்கான பரிசுத்தொகையை எப்பிஐ ரூ.9 கோடியாக அதிகரித்துள்ளது.

# காவேரிப்பட்டினத்தில் மத்திய தொழில் பாதுகாப்பு படையினர் விழிப்புணர்வு அணிவகுப்பு



கிருஷ்ணகிரி, மார்ச். 13-

தமிழக சட்டசபை தேர்தலை முன்னிட்டு வாக்காளர்கள் அச்சமின்றி மற்றும் சுதந்திரமாக வாக்களிப்பதை உறுதி செய்யும் வகையில் காவேரிப்பட்டினத்தில் மத்திய தொழில் பாதுகாப்பு படையினர் விழிப்புணர்வு அணிவகுப்பு நடத்தினர்.

தமிழகத்தில் நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலுக்கான தேதி விரைவில் அறிவிக்கப்பட உள்ள நிலையில், தேர்தல் காலத்தில் பாதுகாப்பு பணிகளை வலுப்படுத்த தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி மத்திய தொழில் பாதுகாப்பு படையினர் (CISF) ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் அனுப்பப்பட்டு வருகின்றனர். அதன்படி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள கிருஷ்ணகிரி, பர்கூர், ஊத்தங்கரை, ஓசூர், தளி மற்றும் வேப்பனஹள்ளி ஆகிய 6 சட்டமன்ற தொகுதிகளில் தேர்தல் பாதுகாப்பு பணியில் ஈடுபட முதற்கட்டமாக 66 வீரர்கள் கொண்ட மத்திய தொழில் பாதுகாப்பு படையினர் மாவட்டத்திற்கு வந்துள்ளனர்.

இதன் ஒரு பகுதியாக, காவேரிப்பட்டினத்தில் நேற்று காலை 11 மணியளவில் விழிப்புணர்வு அணிவகுப்பு பேரணி நடைபெற்றது. மத்திய தொழில் பாதுகாப்பு படை இன்ஸ்பெக்டர் முகேஷ்குமார் மற்றும் கிருஷ்ணகிரி டவுன் இன்ஸ்பெக்டர் சுந்தரபாண்டியன் தலைமையில் காவேரிப்பட்டினம் பேருந்து நிலையத்தில் தொடங்கிய இந்த பேரணி, மாரியம்மன் கோயில், பன்னீர்செல்வம் தெரு உள்ளிட்ட முக்கிய வீதிகள் வழியாக சென்று மீண்டும் பேருந்து நிலையத்தில் நிறைவடைந்தது.

இந்த அணிவகுப்பின் மூலம் தேர்தல் காலத்தில் பொதுமக்கள் எந்த அச்சமும் இன்றி தங்கள் ஜனநாயக உரிமையான வாக்குரிமையை பயன்படுத்த வேண்டும் என்ற விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இந்த பேரணியில் ஆயுதப்படை போலீசார், காவேரிப்பட்டினம் போலீசார் உள்ளிட்ட சுமார் 80 பேர் கலந்து கொண்டனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161